**<u>EA. 05/2023 EP. 36/2021 O.S.No. 44/2012 PW1 -</u>** <u>மீனாட்சி</u> **<u>24.07.2023</u>**

<u>சாட்சி முன்னிலையாகி**,** சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**, 1**ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ம.சா.ஆ.3 பாகக்கரார் பத்திரம் அப்பாத்துரை அவருடைய மகன் முருகேசன், ஆறுமுகம் அவரது மகன்கள் பாலசுப்பிரமணியன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்டது. ம.சா.ஆ.3 பாகக்கரார் பத்திரத்தில் அப்பாத்துரை, முருகேசன் ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்தின் ஒருபகுதி நிறைவேற்று மனு சொத்து. நான் ஒரு பகுதி சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன். பாகக்கரார் பத்திரத்தில் கிழமேல் ரோட்டை ஒட்டி, ஏ அட்டவணை 1வது இலக்க சொத்தும், அதற்கடுத்து வடக்கு பக்கம் 2வது இலக்க சொத்தும் காட்டப்பட்டுள்ளது. ரோட்டை ஒட்டியுள்ள ஏ அட்டவணை 1வது இலக்க சொத்தின் அளவு 37 ½ அடி. ம.சா.ஆ.3ல் நான் கூறுகின்ற சந்து பற்றி குறிப்பிடவில்லை. ம.சா.ஆ.3ல் உள்ள ஏ அட்டவணைச்சொத்தில் 1, 2 அயிட்டச்சொத்துக்களை சேர்த்து ஒருபகுதியை ராஜேஸ்வரி என்பவருக்கு முருகேசன் மற்றும் அவரது அப்பா அப்பாத்துரையும் வா.சா.ஆ.4 மூலம் விற்பனை செய்து கொடுத்துள்ளனர். வா.சா.ஆ.4 கிரய ஆவணத்தில் 1, 2 தாக்குகள் என விவரிக்கப்பட்டுள்ளது. அதில் 1வது தாக்கு நிலத்தை நான் கிரயம் வாங்கியுள்ளேன். நான் கிரயம் வாங்கிய சொத்திற்கு தென்புற அத்தாக முருகேசன், அப்பாத்துரை சொத்து காட்டப்பட்டுள்ளது. மேற்படி ராஜேஸ்வரி கிரயம் வாங்கிய அளவுள்ள அதே சொத்தை மகாதேவன் என்பவருக்கு ம.சா.ஆ.5 மூலம் விற்பனை செய்துவிட்டார். மேற்சொன்ன மகாதேவன் என்பவரின் பொதுஅதிகார முகவர் பாலசுப்பிரமணியனிடமிருந்து செந்தில்குமார் கிரயம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கிரயம் வாங்கிய சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள இடத்தில் செந்தில்குமார் என்பவர் வீடுகட்டியுள்ளார். மேற்படி செந்தில்குமார் என்பவர் 28.10.2010ல் மகாதேவன் மற்றும் பிரதிவாதி முருகேசன் ஆகியோரிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். செந்தில்குமாருக்கு விற்பனை செய்த ஆவணத்தில் முருகேசன் இடத்திற்கு மேற்கு என கூறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி முருகேசன் எனக்கு அண்ணன் உறவு. 15.09.2020 அன்று நான் மகாதேவன் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். வாதி விஜயலெட்சுமி 10.03.2020 அன்று நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே நீதிமன்றம் மூலம் கிரயம் பெற்றுள்ளார். நான் கிரயம் வாங்கிய இடத்தையும் சேர்த்து விஜயலெட்சுமி கிரயம் வாங்கிவிட்டார். செந்தில்குமார் 2010ம் வருடம் .....

கிரயம் வாங்கிய ஆவணத்தில் கிழக்கு பக்க எல்லையாக முருகேசன் என்பவரது இடமாக காட்டப்பட்டுள்ளது. மேற்சொன்ன இடத்தைதான் வாதி கிரயம் வாங்கியுள்ளார். வாதி கிரயம் வாங்கிய சொத்திற்கு மேற்குபக்கம் சந்து உள்ளது என்று என் முன்பாக்கியஸ்தர் ஆவணங்களில் குறிப்பிடவில்லை. வாதி கிரயம் வாங்கிய விவரம் தெரிந்தபிறகு, தவறான சொத்து எல்லையுடன் நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி நீதிமன்றம் மூலம் கிரயம் வாங்கி, அனுபவம் எடுப்பதை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் என் பெயருக்கு கிரய ஆவணத்தை ஏற்படுத்தி, மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கிரய ஆவணத்தில் உள்ள சொத்து விவரங்கள் உள்நோக்கத்துடன் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனது கிரய ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள பாதை சம்மந்தப்பட்ட விவரங்களில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. மகாதேவன் என்பவர் பாதை இல்லை என ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிக்கு முரணாக நான் கட்சி செய்ய முடியாது என்றால் சரியல்ல. வாதி கிரயம் வாங்கி 27 ½ இடத்தில் மேற்குபக்கம் உள்ள பாதை வாதியின் வசதிக்காக விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கிரயம் வாங்கிய இடத்தில் இரண்டு வீடுகள் உள்ளது. அதில் மேற்குபக்கம் இரண்டு வாசல்கள் உள்ளது. தெற்குபக்கமும் ரோட்டை பார்த்து வாசல் உள்ளது. வாதி கிரயம் வாங்கிய வீட்டிலுள்ள மேற்குபக்கம் உள்ள இரண்டு வாசல்களும் தாவா நடைபாதையை ஒட்டி உள்ளது. நான் கிரயம் வாங்கிய இடத்திற்கு தென்பக்கம் செந்தில்குமார் இடமும், வாதி இடமும் உள்ளது. செந்தில்குமார் வீட்டிற்கு மேல்பக்கம் அங்கண்ணன் சந்து என்ற ஒரு சந்து உள்ளது. அந்த சந்து வடபுறம் சென்று, கிழக்குபக்கம் திரும்புகிறது. அந்த சந்து கிழக்காக சென்று முடியும் இடத்தில் நான் கிரயம் வாங்கிய இடம் உள்ளது. என் இடத்திற்கு செல்லக்கூடிய சந்து அங்கண்ணன் சந்துதான் என்றும், வாதி இடத்தின் வழியாக நான் உரிமை கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் இம்மனுவிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் உள்நோக்கத்துடன் மனு தாக்கல் செய்துள்ளதால், எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.